# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, TIRUVANNAMALAI.

## O.S. NO. 249/2022

**31.10.2023 - வா.சா. 1 ராணி சத்திய பிரமாணத்தின் பேரில் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

தாவா அ மற்றும் ஆ அட்டவணை சொத்துக்கள் என்ன என்று எனக்கு தெரியாது. ஒரு அயிட்டத்தை நான் என் கணவரிடம் இருந்து கிரையம் பெற்றுள்ளேன். 2 பாகம் என் கணவர் பொது அதிகாரம் பெற்று வைத்துள்ளார். என் கணவர் 3ல் 1 பாகத்தை எனக்கு கிரையம் கொடுத்துள்ளார். வா.சா.ஆ.4 நகர நில அளவை பதிவேடு மற்றும் வரைபடம் நான் கிரையம் பெற்ற பத்திரத்திற்கு உட்பட்டு இல்லை என்றும், நான் தவறாக பெற்றுள்ளேன் என்றால் சரியல்ல. என் கணவர் என் சகோதரரிடம் இருந்து கடன் பொறுப்பிற்காக பொது அதிகார பத்திரம் எழுதி வாங்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல.

நான் கிரையம் பெற்ற விவரம் செல்வதுரைக்கு தெரியாது என்று சொன்னால் சரியல்ல. ஆ அட்டவணை சொத்தில் பிரதிவாதி அனுமதியின் பேரில் குடியிருந்து வந்ததாக தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. தாவா ஆ அட்டவணை சொத்தை நான் கிரையம் பெறும் காலத்தில் என் சகோதரரை காலி செய்ய சொன்னதாக நான் தவறாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி வியாபாரத்தில் நஷ்டம் ஏற்பட்டு விட்டதாகவும், அதனால் வீட்டை காலி செய்ய முடியாது என்று என்னிடம் கூறியது முற்றிலும் பொய் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதி வியாபாரம் செய்து நஷ்டம் ஏற்பட்டது என்று எனக்கு தெரியாது.

பிரதிவாதி குடியிருப்பதற்கு நாங்கள் வாய் மொழியாக அனுமதி கொடுத்தோம் என்று வழக்கிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி வாடகை செலுத்தாததால் வீட்டு வரியை பிரதிவாதியே அவரது தகப்பனார் பெயரில் செலுத்தி வந்தார். நானும், என் கணவரும் மோசடியாக சொத்தை அபகரிப்பதற்காக வா.சா.ஆ.3 மற்றும் 4 ஆவணங்களை தயாரித்துள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. பிரதிவாதியின் குடும்ப சொத்தை அபகரிப்பதற்காக செயல்பட்டுள்ளோம் என்று சொன்னால் சரியல்ல. என் மகன் சேகரின் கையெழுத்து எனக்கு தெரியாது. 24.11.2016ல் என் மகன் சேகர் செல்வதுரையிடம் ரூ. 4 லட்சம் திரும்ப பெற்றுக் கொண்டு அதற்காக ஒரு ரசீதும் கொடுத்துள்ளார் என்றால் அது பொய்.

என் மகன்கள் எங்களுடன் இருக்காததற்கு காரணம் தாவா சொத்தை நாங்கள் வில்லங்கம் செய்த விதம் அவர்களுக்கு பிடிக்காததால் தான் என்றால் சரியல்ல. கிரையத்தின் போது என் அண்ணன் உடன் இருந்தார் ஆனால் கிரையப் பத்திரத்தை அவர் எழுதி கொடுக்கவில்லை. ஏனென்றால் ஏற்கனவே அவர் என் கணவருக்கு பொது அதிகார பத்திரம் எழுதிக் கொடுத்துள்ளார். வா.சா.ஆ.3 கிரையப் பத்திரத்தில் 3ல் 1 பாகம் கிரையம் பெற்றிருந்த போதிலும் வா.சா.ஆ.4ல் குறிப்பிட்ட பாகத்திற்கு பட்டா பெற்றது செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல.

இவ்வழக்கில் செல்வதுரையின் மற்ற வாரிசுகளை உரிய தரப்பினராக சேர்த்திருக்க வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. செல்வதுரை தகராறு செய்ததால் அவரை நான் பிரதிவாதியாக சேர்த்துள்ளேன். நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. நான் தவறான பயனை அடைவதற்காக மோசடியாக ஒரு வழக்கு தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

ஒம்/- ராணி

Taken down by me in Open Court read over to the witness and knowledged by him/her as correct

Sd/- Irusan Poonguzhali,
Additional District Judge,
Tiruvannamalai.